**ஐக்கிய அமெரிக்க தூதரகம்**
**கொழும்பு**
**ஊடக அறிக்கை**

பொது அலுவல்கள் பிரிவு
தொ.பே: +94 (11) 249-8100 ● பெக்ஸ்: +94 (11) 244-9070
ஈமெயில்: VanHornNT@state.gov ● http://lk.usembassy.gov

ஊடக அறிக்கை இலக்கம்: 20200713

**நீர்ப்பரப்புகளிலான மீட்பு நடவடிக்கைகளுக்கு உயிர்காக்கும் உபகரணங்களை அன்பளிப்பு செய்யும் அமெரிக்கா**

**பெந்தோட்டை, ஜூலை 13** – நீர்ப்பரப்புகளிலான பாதுகாப்பை மேம்படுத்துவதற்கான இலங்கையின் முயற்சிகளுக்கு பங்களிப்பு செய்வதற்காக ஸ்ரீலங்கா லை∴ப் சேவிங்கின் (Sri Lanka Life Saving) தலைவர் அசங்க நாணயக்காரவுக்கு மீட்புப் படகு இயந்திரங்கள் மற்றும் ஏனைய உயிர்காக்கும் உபகரணங்களை இலங்கை மற்றும் மாலைத்தீவுக்கான அமெரிக்க தூதுவர் அலெய்னா பி. டெப்லிட்ஸ் நன்கொடையாக ஜூலை 10 ஆம் திகதி கையளித்தார். கொந்தளிப்பான கடலோர நீர்ப்பரப்புகளில் உயிர்காக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அந்த அமைப்பின் திறனை இந்த உபகரணங்கள் பெரிதும் அதிகரிக்கும் என்பதுடன், பருவமழை வெள்ள காலத்தின் போது இலங்கையின் தேடுதல் மற்றும் மீட்பு நடவடிக்கைகளை வலுப்படுத்தவும் உதவும்.

காற்றினால் நிரப்பக்கூடிய மீட்புப் படகுகளுடன் பயன்படுத்துவதற்கான 3 சுசூகி 40ஹெச்.பி. வெளிப்புற மோட்டார்கள், படகை இயக்குபவர்களுக்கான 44 பாதுகாப்பு தலைக்கவசங்கள், 11 மீட்புக் கயிறுகள் மற்றும் 22 உயிர்காப்பு மிதவை வலயங்கள் என்பன அமெரிக்க பாதுகாப்பு திணைக்களத்தினால் நிதியளிக்கப்பட்ட இந்த அன்பளிப்பில் உள்ளடங்குகின்றன. இந்த அன்பளிப்புக்கு மேலதிகமாக முதலாவது தேசிய நீர்ப் பாதுகாப்பு கொள்கையை உருவாக்க உதவுவதற்கும் அமெரிக்க தூதரக அதிகாரிகள் சுகாதார, கல்வி, மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சுகளுடன் பணியாற்றியுள்ளனர்.

“பருவமழை வெள்ளம் மற்றும் பிற இயற்கை அனர்த்தங்களின் போது இலங்கை மக்களின் உயிர்களை நிச்சயமாக காப்பாற்றும் இந்த மீட்பு உபகரணங்களை அமெரிக்காவால் வழங்க முடிந்ததையிட்டு நான் மகிழ்ச்சியடைகிறேன்,” என்று தூதுவர் டெப்லிட்ஸ் தெரிவித்தார். “இலங்கை மக்களின் நலன் மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்த இலங்கை சிவில் சமூகத்தை வலுவூட்டுவது எமது நீண்டகால ஒத்துழைப்பின் முக்கிய அங்கமொன்றாகும்,” என்றும் அவர் குறிப்பிட்டார்.

பல தசாப்தங்களாக அனர்த்த நிவாரண மற்றும் மனிதாபிமான உதவிகளை அமெரிக்கா இலங்கைக்கு வழங்கியுள்ளது. சுனாமி மீட்சி உதவி, 2017 வெள்ள நிவாரணம், உட்டகட்டமைப்பு மேம்பாடுகள், மேம்படுத்தப்பட்ட வானிலை முன்னறிவிப்புகள், மற்றும் தற்போதைய அனர்த்த முகாமைத்துவ மற்றும் மருத்துவ பயிற்சி மற்றும் உதவிகள் என்பன இதில் உள்ளடங்குகின்றன. கடந்த 70 வருடங்களில் 370 பில்லியன் ரூபாவை அமெரிக்கா இலங்கைக்கு உதவியாக பங்களிப்பு செய்துள்ளது. இதில் எதுவும் திருப்பிச் செலுத்தப்படத் தேவையில்லை. இந்த உதவியானது உறுதியான, இறையாண்மை கொண்ட இலங்கையொன்றை வளர்க்க உதவியுள்ளது.